# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I
# DINDIGUL.

**C.C.No. 1034/2025**

**Prosecution Witness : 1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **முனீஸ்வரி** | **Caste** | : | |
| **Husband's Name** | : | அருள்ராஜ் | **Calling** | : | **தற்காலிக பணி** |
| **Village** | : | **செம்பட்டி** | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | **44** |
| | | | **Dated** | : | **24.11.2025.** |

**24.11.2025.**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி–1 திருமதி. **முனீஸ்வரி** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா.1 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**<u>எதிரி ஆஜரில்லை. 355 BNSS Petition filed and allowed.</u>**

1. நான் திண்டுக்கல் **செம்பட்டி** குடியிருந்து சின்னாளப்பட்டி அரசு மருத்துவமணையில் தற்காலிகமாக வேலை செய்து வருகிறேன். சம்பவத்தின் போது திண்டுக்கல் கலெக்ட்ரேக்ட் அரசு குடியிருப்பில்

குடிருந்து வந்தேன். இவ்வழக்கு சம்பவத்தில் இறந்த அருள்ராஜ் எனது கணவர். அவர் ரெட்டியார் சத்திரம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் ஓட்டுநராக வேலை செய்து வந்தார். கடந்த 15.01.2025ம் தேதி எனது கணவர் குவாட்ரஸ்ல் இருந்து செம்பட்டியில் இருந்த எனது மகளை கூப்பிட்டு வருவதற்காக இருசக்கர வாகனத்தில் சுமார் மதியம் 2.45 மணிக்கு கிழம்பினார். அதன் பின்னர் சுமார் 3.00 மணிக்கு எனது உறவுக்கார பையன் ரஞ்சித்குமார் எனக்கு போன் செய்து ஆரியநல்லூர் பிரிவு அருகே விபத்து நடந்ததாக தகவல் சொன்னார். காயம்பட்ட எனது கணவரை 108 ஆம்ப்லன்ஸில் திண்டுக்கல் அரசு மருத்துவமணைக்கு அழைத்து செல்வதாகவும், என்னை அங்கு வருமாறும் சொன்னார். நான் திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது எனது கணவருக்கு பின் தலையில் காயம்பட்டிருந்தது. மூக்கு மற்றும் காதில் இரத்தம் வந்தது. சம்பவம் பற்றி ரஞ்சித்குமாரிடம் கேட்டபோது எனது கணவர் திண்டுக்கல்லில் இருந்து செம்பட்டி நோக்கி இருசக்கர வாகனத்தில் வந்துக்கொண்டிருந்தபோது ஆரிய நல்லூர் பிரிவில் ஊருக்குள் இருந்து தெற்கு இருந்து வடக்கு நோக்கி அதிவேகமாக வந்த கார் எனது கணவர் மீது மோதியதாகவும், இதை ரஞ்சித்குமாரும், வெங்கடேசும் நேரில் பார்த்ததாகவும், எனது கணவர் மீது மோதிய காரை சங்கர நாராயணன் என்ற மதுரைக்கார பையன் ஓட்டியதாக சொன்னார். திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் எனது கணவருக்கு சிகிச்சை வழங்கினார்கள் பின்னர் எனது விருப்பப்படி JCB மருத்துவமனைக்கு எனது கணவரை அழைத்து சென்றேன். அங்கு எனது கணவர் சிகிச்சையில் இருந்தபோது போலிசார் வந்து விசாரிக்க நான் புகார் கொடுத்தேன். அந்த புகாரை எனது கொளுந்தன் வினோத் குமார் எழுதினார். புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **புகார் அதசா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** JCB மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த எனது கணவரின் உடல் நிலை மிகவும் மோசமானதால் அவரை மீண்டும் திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். அங்கு எனது கணவர் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

## எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான்.

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

PACKIARAJ Digitally signed by PACKIARAJ Date: 2025.11.24 12:58:02 +0530

Judicial Magistrate No.I

Dindigul.